பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஐப்பசி 13 ஜூலை: 15 இதழ் 259
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-10-77

அண்ணா
பற்பொடி
விலை விபரம்
1 பக்கட்-/15 சதம்
1 பண்டல் ரூபா 6/-
தொகையாக எடுப்பவர்களுக்கு
விசேட கழிவு உண்டு.

அண்ணா பற்பொடியின் வெற்றுப் பக்கட்டுகளைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெறுங்கள்

## துப்பாக்கி காட்டி பஸ்ஸில் கொள்ளை!

யாழ்ப்பாணம், சனி

புன்னாலைக்கட்டுவன் பஸ்ஸில் 3 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் கண்டக்டரிடம் 300 ரூபா கொள்ளையடித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவனிலிருந்து கோண்டாவில் இ. போ. ச. டிப்போவிற்கு நேற்று முன் தினம் இரவு வந்த கடைசி பஸ்ஸிலேயே இச் சம்பவம் நடைபெற்றது.

இளைஞர்கள் வழியில் பஸ்ஸை மறித்து அன்று சேர்ந்த பணத்தை கண்டக்டரிடமிருந்து கொள்ளையடித்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து யாழ்ப்பாணத்தின் பிரதான

(6ம் பக்கம் பார்க்க)

### '78-ல் பங்கீட்டு முறையில் மாற்றம்!

# அரசின் புதிய திட்டங்களை நிறைவேற்ற ரூ. 600 கோடி!

## நிதி அமைச்சர் தகவல்

கொழும்பு, வெள்ளி

**அடுத்தாண்டில் பங்கீட்டு முறையில் பெருமாற்றங்கள் செய்யப்படும் என்று நிதி அமைச்சர் திரு. றொனி டி மெல் தெரிவித்தார்.**

**அரசாங்கத்தின் புதிய திட்டங்களை நிறைவேற்ற 600 கோடி ரூபாவரை தேவைப்படுகிறது என்றும் திரு. டி. மெல் கூறினார்.**

கொழும்பு மத்திய வங்கி மண்டபத்தில் இன்று காலை வங்கி அதிபர்கள், திறைசேரி அதிகாரிகள், அரசாங்க கூட்டுத்தாபன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட மகாநாட்டில் பேசுகையிலேயே திரு. மெல் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அடுத்தாண்டில் உற்பத்திக்கும், அதிகரித்த வேலைவாய்ப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் பங்கீட்டு முறையிலும் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படும் என்றும் நிதியமைச்சர் திரு. மெல் கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

"அரசாங்க உத்தியோகத்தர்கள் மீது பிரதமரும் அரசாங்கமும் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் அரசாங்க ஊழியர்கள் நடந்து கொள்ள வேண்டும்"

அரசின் தற்போதைய திட்டங்களை நிறைவேற்ற வருடாந்தம் 500 கோடி ரூபா முதல் 600 கோடி ரூபாவரை தேவைப்படுகிறது.

சுபீட்சமான, சுதந்திரமான பொருளாதாரத் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டே பங்கீட்டு முறையிலும் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டிலும் மாற்றம் கொண்டு வரப்படவிருக்கிறது.

### தொலைபேசியில் கோடிக்கணக்கில் கடன்......!

முன்னைய அரசாங்கம் தமது திட்டங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வங்கிகளிலிருந்து தொலைபேசி மூலம் 2 கோடி முதல் 3 கோடி வரை கடன் பெற்றதாகவும் கூறிய அமைச்சர் தகைமை இல்லாத எவரையும் எப்பதவிகளுக்கும் நியமிக்கவேண்டாம் என்றும் உயர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டனர். (உ-இ)

## நாட்டின் நிலைமை சீரடைந்துவிட்டது

### — மேஜர் சேபால அட்டிக்கலை

யாழ்ப்பாணம், சனி

நாடு முழுவதும் நிலைமை சீரடைந்து விட்டது என்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் மேஜர் திரு. சேபால அட்டிகல நேற்று யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்த வணிகர்சங்க மாநாட்டில் தெரிவித்தார்.

திரு. சேபால அட்டிகல மேலும் கூறியதாவது 'வன்முறைச் செயலுக்கு முன்பு எப்படி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்களோ அதேபோல அல்லது அதிலும் கூடுதலாக ஐக்கியமாக வாழவேண்டும். இந்த நிலையை எப்படி உருவாக்கலாம் என்று ஆராய்ந்து செல்வதற்காகவே வந்துள்ளோம். இதற்காக வணிகர் சங்கத்தினர் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

கலவரம் எப்படி நடந்தது என்பதுபற்றி ஆராயாமல், கலவரத்திற்கு முன் இருந்த நிலைமையை எப்படி ஏற்படுத்தலாம் என்று ஆராய வேண்டும் அதற்கு வணிகர் சங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். (க)

## "எங்களைப்போல் நீங்களும் காப்பாற்றவேண்டும்"

### கச்சேரி மாநாட்டில் கேணல் தர்மபாலா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

"எங்கள் பகுதியில் உங்கள் தமிழ் சகோதரர்களுக்கு தகுந்த பாதுகாப்பளித்து காப்பாற்றியுள்ளோம். அதேபோல், உங்கள் பகுதியில் சிங்கள சகோதரர்களைப் பாதுகாத்து காப்பாற்ற வேண்டும்."

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடந்த அகில இலங்கை வணிகர் சங்க மாநாட்டில் பேசிய பாதுகாப்பு

(2 ம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் மறைவு

கொழும்பு, வெள்ளி

வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ், இந்து கலாசாரத் துறைத் தலைவர் டாக்டர் எஸ். தனஞ்செயராசசிங்கம் நேற்று முன்தினம் காலமானார்.

பல அரிய நூல்களின் ஆசிரியரான இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

## யாழ். வளாகம் தரம் குறைந்ததா?

### தமிழ் மன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையில் எந்த வளாகத்திலும் இல்லாத அலகு நெறி முறை போதனை வகுப்புகள் யாழ். வளாகத்தில் மட்டுமே விஞ்ஞான மாணவருக்கு நடைபெற்று வருகின்றது. வன்செயல்களுக்குப் பின் ஏனைய வளாகங்களில் உள்ள சிறந்த பல விரிவுரையாளர்கள் தாமாகவே எமது வளாகத்திற்கு மாற்றம் கோரி வருகின்றனர். திருநெல்வேலியில் விடுதிவசதி, சிறந்த விஞ்ஞான ஆய்வு கூடங்கள் புதிதாகக் கட்டப்பட்டு திறக்கப்படவுள்ளன. இந்நிலையில் யாழ். வளாகம் தரம் குறைந்தது எனக் கூறி ஏனைய வளாகங்களில் அனுமதி பெற்றவர்களை இங்கு மாறிவர வேண்டாமென ஒரு சாரார் பிரச்சாரம் செய்வதை யாழ். வளாகத் தமிழ் மன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது' என மன்றத்தின் சார்பில், தலைவர் நா. தர்மராஜாவும் செயலாளர் செ. சண்முகநாதனும் கூட்டாக விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: யாழ். வளாகத்தில் சில பிரிவுகள் ஏனைய வளாகங்களிலுள்ள பிரிவுகளைவிட மிகவும் தரமான முறையில் இயங்கி வருகின்றன. யாழ். வளாகத்தில் மட்டுமே விஞ்ஞான மாணவர்களுக்கு அலகு நெறி முறை போதனையுள்ளது. இது வித்தியாலங்கார வளாகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு இப்போது கைவிடப்பட்டுள்ளது. இம்முறை அமெரிக்காவில் கைக்கொள்ளும் போதனை முறையாகும். இம்முறை யாழ். வளாகத்தில் மட்டுமே வெற்றியளித்த பெருமை எமக்குண்டு.

(6-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைகளில் சம்பந்தமான கைத்துப்பாக்கி மீட்பு?

### பெண் உட்பட நால்வர் பாதுகாப்பில்

சங்கானை, வெள்ளி

அண்மைக்காலத்தில் வட பகுதியில் நடந்த வன்செயல்களுக்குப் பாவிக்கப்பட்டதெனக் கருதப்படும் கைத்துப்பாக்கியொன்றைக் கைப்பற்றி அது வைத்திருந்தவர் எனக் கருதப்படும் ஒருவரையும் சங்கானைப் பொலிசார் சந்தேகத்தின் மீது கைது செய்துள்ளனர். இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர் எனக் கருதப்படுகிறது.

இது சம்பந்தமாக ஒரு பெண் உட்பட நால்வர் சுன்னாகம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

இரகசியத் தகவலைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் சரத்சில்வா, பொலிஸ் கான்ஸ்டபிள் குணரத்ன ஆகியோர் நேற்று இழமை நள்ளிரவில் வீடொன்றில் வைத்தே சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவர் கொடுத்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் ஆலங்குளாயைச் சேர்ந்த இருவர் விசாரணைக்குட் படுத்தப்பட்டனர். இவர்களின் வாக்குமூலத்தை

(6-ம் பக்கம் பார்க்க)

## தொலை பேசிகள் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், சனி

தொடர்ந்து பெய்த பெருமழையை அடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான தொலைபேசிகள் கடந்த இரண்டு நாட்களாக இயங்கவில்லை.

# விநோதன் மீதான தடை உத்தரவு ரத்து

யாழ்ப்பாணம், சனி

வடஇலங்கை சுதேச வைத்திய சபைத் தலைவர் கு. விநோதன், செயலாளர் டாக்டர் ஏ. நடராசா ஆகியோர் மீது விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவு நேற்று முன்தினம் ரத்துச்செய்யப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஆயுர்வேதக் கல்லூரியின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதால், தலைவரும், செயலாளரும், அவர்களது பிரதிநிதிகளும், ஆயுர் வேதக் கல்லூரிக்குள் செல்லக்கூடாதென தடைஉத்தரவு விதிக்குமாறு கோரி கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் ஏ. கங்காதரன், டாக்டர் கே. அருளானந்தம், டாக்டர் ஏ. வி. இராசரத்தினம், டாக்டர் வி. குமாரசாமி, டாக்டர் கே. சிற்றம்பலம் ஆகியோர் மனுவில் கோரியிருந்தனர்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், சட்டத்தரணி சகித் ஆகியோரும் எதிர்மனுதார்கள் சார்பில் சட்டத்தரணி சண்முகலிங்கம், சட்டத்தரணி வி. பத்மநாதன், சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் ஆகியோரும் ஆஜராஞர்கள்.

இம்மனு தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, நீதிபதி இடைக்கால தடை உத்தரவு வழங்கிஞர். இதுபற்றிய விசாரணை நடைபெற்று நேற்று முன்தினம்தீர்ப்பு வழங்கப்பட்டது

இத்தீர்ப்பில் இடைக்காலத் தடைஉத்தரவு ரத்துச்செய்யப்பட்டதுடன் எதிர்மனுதாரர்களுக்கு, வழக்குச் செலவாக 500 ரூபா வழங்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம், திரு. விநோதன்மீதும் மற்றவர்கள்மீதும் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவை ரத்துச் செய்து அளித்த தீர்ப்பில் கூறியதாவது:

வாதிகள் தமது மனுவில் முதலாவது பிரதிவாதி, வடஇலங்கை சுதேசவைத்தியசபை தலைவர் பதவியிலிருந்து 5-10-76ல் ராஜிஞமாச் செய்தாரென்றும் ஆனல் மேற்படி கல்லூரி அமைதியாகச் செயல்படாமல் தடைசெய்யும்விதத்தில் முயற்சிகள் செய்கிருர் என்றும் தெரிவித்து இப்படியான தடைமுயற்சிகளில் இரு நிகழ்ச்சிகளையும் எடுத்துக்காட்டினர். தலைவர் பதவியிலிருந்து விலகியபின்னர் 76ம் ஆண்டு டி., ஏ. எம். பரீட்சைகளைப் பின்போடுவதற்காக கொழும்பிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரிப் பதிவாளரிடம் அவர் தூது சென்றதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி சபையின் கூட்டமொன்று 5-11-76ல் நடைபெற்றதாகவும் முதலாம் எதிரியின் ராஜிஞமாவை சபை நிராகரித்துவிட்டதாகவும் 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையில் முதலாம் இரண்டாம் எதிரிகள் செய்தியொன்றை வெளிவரச் செய்தனர் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்படியான கூட்டம் எதுவும் நடக்கவில்லையென்று அவர்கள் மறுத்தனர்.

பிரதிவாதிகள் கல்லூரிக் கட்டடத்தையும் காரியாலயத்தையும் கைப்பற்ற முயற்சி எடுப்பதாகவும் இதன்மூலம் தங்களுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தை ஏற்படுத்த முனைகிருர்கள் என்றும் மனுதார்கள் தெரிவித்து இடைக்காலதடை உத்தரவொன்றை உடனடியாக விதிக்கும்படியும் கோரியிருந்தனர்.

இடைக்காலத்தடை உத்தரவு விடுக்கப்பட்டதின்பின்னர் பிரதிவாதிகளின் ஆட்சேபனை மனுமீது விசாரணையொன்று நடத்தப்பட்டது இது விசாரித்து முடிவதற்கு முன்பதாக பிரதிவாதிகள் இன்னெரு மனுவை தாக்கல்செய்தனர். இந்த வழக்குத் தீர்மானிக்கப்படும்வரையில் கூட்டங்களை நடத்தாமல் தடை செய்வதிலிருந்து வாதிதரப்பினருக்கு இடைக்கால தடைஉத்தரவொன்றை விதிக்கும்படி அவர்கள் கோரினர். நடைமுறை ஒழுங்கினங்கள் சம்பந்தமான ஆட்சேபனைகளை மனுதாரர்கள் கிளப்பினர். சட்டவிதிகளின்படி பிரதிவாதிகள் தமது பதிலை அணைக்கும்வரையில் அவர்களின் மனு ஏற்கப்படமுடியாது என நான் தீர்ப்பளித்தேன். பிரதிவாதிகள் உரியகாலத்தில் பதில்அணைத்து சரியான முகவரிக்கு பிரதிகள் அனுப்பத் தவறிவிட்டதாக மீண்டும் மனுதாரர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

மனுமீதான விசாரணையின்போது 2வது பிரதிவாதி சாட்சியமளிக்கையில் கல்லூரியின் கட்டிடத்தையும் காரியாலயத்தையும் கைப்பற்றும் நோக்கமே தங்களுக்கு இருக்கவில்லையென்று தெரிவித்தார். முதலாவது, மூன்றுவது மனுதார்கள் தமது சாட்சியத்தில் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த அச்சத்தை உறுதி செய்யவில்லை. பிரதிவாதிகள் பரீட்சையைப் பின்போடுவதற்கு முயற்சி எடுத்ததிஞல் கல்லூரியின் அமைதியான செயல்பாட்டுக்கும் இவர்கள் பின்னர் குந்தகம் விளைவிக்கலாம் என தாங்கள் அஞ்சியதாகவே அவர்கள் கூறினர். கல்லூரி கட்டிடத்தையும் காரியாலயத்தையும் எதிர்மனுதார்கள் கைப்பற்ற முனைந்தார்கள் என்பதற்கு சிறிதளவும் சாட்சியம் இல்லை. இடைக்கால தடை உத்தரவுக்கான மனு தாக்கல் செய்யப்பட்டபோது மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி தெரிவித்த கருத்துக்களின்படி, எதிர்மனுதார்கள் இளைஞர்களின் கோஷ்டியொன்றை உருவாக்கியுள்ளதாகவும் அமைதியாக விளங்கும் கல்லூரியை இவர்கள் ஆக்கிரமிக்கக்கூடும் என்றும் நான் கருதவேண்டி ஏற்பட்டது. இன்னெரு அம்சத்தையும் இங்கேகுறிப்பிடவேண்டும் குற்றப்பத்திரமும் சத்தியக் கடதாசியும் 2-வது பிரதிவாதி கல்லூரியில் ஒரு விரிவுரையாளர் என்பதை எடுத்துக்காட்டவில்லை. இதுபற்றி நீதிமன்றத்துக்கு விளக்கமளிக்கப்பட்டிருப்பின் அவர் கற்பிக்கும் கல்லூரிக்குள் நுழைவதைத் தடைசெய்யும் இடைக்கால தடைஉத்தரவு அறிவித்தலின்றி விடுக்கப்பட்டிருக்கமாட்டாது. ஓர் உண்மையை மாற்றிக்கூறியும்இன்னென்றை மறைத்துவைத்தும் இந்த இணைக்கட்டளை பெறப்பட்டுள்ளதென நான் முடிவு செய்கின்றேன். இந்த இணைக்கட்டளை உடனடியாக ரத்துச் செய்யப்பட வேண்டுமெனவும் இந்த விசாரணை தொடர்பான செலவுத் தொகையாக எதிர்மனுதாரர்களுக்கு ரூபா 500 மனுதாரர்கள் வழங்கவேண்டுமெனவும் உத்தரவிடுகின்றேன்.

## மின்சாரம் தாக்கிய பெண்ணை

### சாதுர்யமாகக் காப்பாற்றினர்

யாழ்ப்பாணம், சனி

முள்ளுக்கம்பி வேலியில் ஆட்டைக் கட்டியசமயம், மின்சார ஒழுக்கிஞல் மின்சாரம் தாக்கிய நிலையில் துடிதுடித்த பெண் ஒருவரைத் மின்சார உத்தியோகஸ்தர் சாவிலிருந்து காப்பாற்றி தாமே முதலுதவி அளித்து ஆஸ்பத்திரியில்சேர்த்தார்.

இச்சம்பவம் உடுப்பிட்டியைச் சேர்ந்த நவிண்டில் கிராமத்தில் நடைபெற்றது. திருமதி அன்னம்மா கார்த்திகேசு என்பவரே மின்சாரத் தாக்குதலுக் குள்ளாகியவராவார்.

வீதியோரத்தில் பதிக்கப்பட்ட பைப்பைத் திருடியவர்கள் அதனுடன் இணைக்கப்பட்ட கம்பியை முள்ளுக்கம்பியில் மாட்டியிருந்ததாகவும் அதில் மின் ஒழுக்கு ஏற்பட்டிருந்ததாகவும் இதனை அறியாத பிரஸ்தாப பெண் ஆட்டைக்கட்ட முற்பட்டபோது மின்சாரம் தாக்கியதாகவும் தெரிகிறது.

இதனை அறிந்த மின்சார உத்தியோகத்தரான ஜெயேந்திரா ராஜக்கோன் என்பவர் உடனடியாக உடுப்பிட்டி மின்சார நிலையத்திற்குச் சென்று மின்சாரத்தை நிறுத்திவிட்டு மயக்க நிலையில் இருந்த பெண்ணுக்கு 20 நிமிடமாக செயற்கைச் சுவாசமளித்து முதலுதவி வழங்கிஞர். பின்னர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று அனுமதித்தார். பெண்மணி ஆபத்திலிருந்து தப்பிவிட்டதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (கெ-அ)

மயிலிட்டி கொலை:

## அடையாளம் காணப்பட்ட சந்தேகநபருக்கு றிமாண்ட்

மாவிட்டபுரம், வெள்ளி

மாமியார் கொலைசெய்யப்பட்டது குறித்துக் கைதான மருமகன் அடையாள அணிவகுப்பின்போது சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டார்.

மயிலிட்டியைச் சேர்ந்த இராசா பெண் இரத்தினம் என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்ட அவரது மருமகனை மயிலிட்டியைச் சேர்ந்த வி. தங்கலிங்கம் என்பவர் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம் கே. குணரத்தினம் ஆகியோர் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவரை அடையாளம் காண்பதற்காக மல்லாகம் பதில் நீதிபதி திரு வி. ஜி. பாலசிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புநடைபெற்ற சமயம் சாட்சிகள் இவரை அடையாளம் காட்டிஞர்கள்.

இதையடுத்து இந்நபர் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டார்.

பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம் காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் கே. சிவப்பிரகாசத்தின் உதவியுடன் ஆஜராஞர். (உ)

## எங்களைப்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு செயலாளர் கேர்ணல் தர்மபாலா மேற்கண்டவாறு கூறிஞர்

இம்மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் மேஜர் சேபால அட்டிகல, உதவிப் பொலிஸ்மா அதிபர் திரு. அனே செனிவரத்ன, யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா, யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகல, தென்பகுதியிலிருந்து வந்த வணிகர் சங்க பிரதிநிதிகளும் யாழ் வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

கேர்ணல் தர்மபாலா மேலும் கூறியதாவது:-

''சிங்கள சகோதரர்கள், திரும்பவும் இங்குவந்து வாழமுடியாத நிலையில் சந்தேகக் கண்கொண்டு நோக்குகிருர்கள். அவர்களின் சந்தேகம் தீர இப்படியான மாநாடுகள் வழிவகுக்கவேண்டும். அதற்கு இந்த வணிகர் சங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

'உங்கள் மகிழ்ச்சிகரமான முடிவை பிரதமரிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பேன்.'

'இன்று கொழும்பிலிருந்து இங்கு வந்த தமிழ் சகோதரர்கள் மீண்டும் அங்குவந்து வாழக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் அப்படி திரும்பி வராதவர்கள், அங்குவந்தால் தேவையான உதவிசெய்ய காத்திருக்கின்றேன் கொழும்பில் மட்டுமல்ல மற்றபகுதிகளிலும், தமிழ் சகோதரர்கள் மீண்டும் வந்தால் அவர்களை சிங்களச் சகோதரர்கள் அன்புக்கரம் நீட்டி அழைக்க காத்திருக்கிருர்கள்.

'வடக்கில் வங்கிக் கொள்ளை சர்வ சாதாரணமாகிவிட்டது. இதஞல், பொருளாதார அபிவிருத்தி உற்பத்தி திட்டங்கள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இக்கொள்ளை பற்றி துப்புகிடைப்பதில்லை. யாரும் அதுபற்றி தகவல் கொடுப்பதில்லை. இக்கொள்ளை பற்றி இனிமேல் கவனமாக இருக்கவேண்டும்' என்று கேர்ணல் தர்மபால கூறிஞர்.

(இந்த மாநாடு பற்றிய முழுவிபரமும் திங்கட்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.)

## சமயபாடப் பரீட்சை

காரைநகர், வெள்ளி

ஈழத்துச்சிதம்பரம் திருவாதிரை உற்சவத்தை முன்னிட்டு இந்த ஆண்டும் காரைநகர் மணிவாசகர் சபையினர் காரைநகரில் உள்ள பாடசாலை மாணவர்ளுக்கிடையே சமயபாடப் பரீட்சை நடாத்தவுள்ளனர்

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் காரைநகரில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. பரீட்சை அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. பரீட்சைப்பொறுப்பாவர்களான திரு. மா. கனகசபாபதி திரு. க. சிவகுமாரன் ஆகியோர் பரீட்சை ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர். (அ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சண்டிலிப்பாய் ஐயஞர் கோவிலடியில் 35 பரப்புள்ள காணி நடுவில் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பரப்பு விலை 700 ரூபாவரை எதிர்பார்க்கப்படுகின்றது. விபரங்களுக்கு எஸ். கனகராஜன், 37 பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை. 7526

தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் பதவி விண்ணப்பப்படிவம். சதம் 25, விபர இதழ் சதம். 15 தேவையான பிரதிகளுக்கு முத்திரைகளும், 15 சத முத்திரை ஒட்டிய என்வலப்பும்அனுப்புக. ஆனந்தாபுத்தகசாலை, 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். அல்லது பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7529

நல்ல நிலையில் உள்ள CV 5069 இலக்கமுடைய ஏபோட்டி வான் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு க. சி. தாமோதரம்பிள்ளை, ''சிவசுந்தரபதி'', தாவடி வடக்கு. 7520

### தேவை

30-40 வயதுடைய கணக்கெழுதத் தெரிந்த, தட்டெழுத்தனுபவமுள்ள காசாளர் தேவை. அனுபவம் தகைமை சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். 5&7 பெரியகடை, யாழ்ப்பாணம். 7524

21-30 வயதுடைய லொறி டிரைவறிகளார்க்தேவை. அனுபவம், தகைமை சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும் 5&7, பெரியகடை, யாழ்ப்பாணம். 7523

Percival Hall
Chapel Street, Jaffna
I. C. M. A. FOUNDATION
SECT. A & CHARTERED
PRELIMINARY
Application close 7-11-77
Enrolment 11-11-77
I. C. M. A. Foundation B
Professional I
Application 30-11-77
Enrolment 5-12-77
7530


## எம். ஜி. ஆர். மீது

### இப்படி ஒருகுற்றச்சாட்டு

சென்னை, அக். 29

அருப்புக் கோட்டை தொகுதியில் சுற்றுப்பயணம் செய்யும் தமிழக முதல்வர் எம். ஜி ஆருக்கு குழம்புவைக்க மதுரையிலிருந்து விசேட சமையல் காரர் அமர்த்தப்பட்டார் எனவும் அவர் தங்கியிருக்க 2 'குளு குளு' அறைகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன எனவும் ஆடம்பரத்தை விரும்பாத தமிழக முதல்வர் இவ்வாறு செய்யலமா எனவும் அருப்புக் கோட்டை தி. மு. க. தலைவர் பத்திரிகைக்குவெளியிட்ட அறிக்கையில் கேட்டுள்ளார்.


## அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணங்களிஞல் 29ம், 30ம் திகதிகளில் யாழ் வளாகத்தில் நடைபெறவிருந்த 'இலங்கையில் பிரதேச அபிவிருத்தி' கருத்தரங்கு பின்போடப்பட்டுள்ளது. கருத்தரங்கிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்,
ஊற்று நிறுவனம்.

7531

ஸ்தாபன காங்கிரஸ் — காங்கிரஸ்

# இணைப்பை ஏற்படுத்த இந்திரா முயன்றாராம்

## பிரதமர் மொரார்ஜி தகவல்

புதுடில்லி, அக். 28

" ஸ்தாபன காங்கிரஸ்-காங்கிரஸ் இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

"ஸ்தாபனகாங்கிரஸ் என்ற ஒருகட்சியே இப்போது இல்லை. ஜனதா கட்சிதான் உள்ளது" என்றும் சொன்னார் பிரதமர்.

'ஸ்தாபன காங்கிரஸுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்த ஏதாவது யோசனையிருந்தால் அதற்கு ஒருபோதும் தடையாக இருக்கப்போவதில்லை' என்று திருமதி இந்திராகாந்தி தம்மிடம் ஒருதடவை கூறியிருந்ததாகவும் திரு. தேசாய் தெரிவித்தார்.

தான் பிரதமர் பதவியேற்ற பின் தன்னைச் சந்தித்த மூன்று தடவைகளில் ஒருதடவை இவ்வாறு திருமதி காந்தி கூறியதாக திரு. தேசாய் சொன்னார்.

வன்முறைகள் நாட்டில் தலைதூக்குவதை அரசு பார்த்துக் கொண்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது 6 நாள் ரஷ்ய விஜயத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நேற்றுக் காலை புதுடில்லி திரும்பினார்.

### பிரிக்கமுடியாத பிணைப்பு

இவருடன் ரஷ்யா சென்றிருந்த பாரத வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய், "பாரத—ரஷ்ய உறவுமேலும் வலுப்பட்டிருப்பதாகவும் இத்தப் பிணைப்பை முறியடிக்க எந்த சக்தியாலும் முடியாது' என்று சொன்னார்.

கொட்டும் மழையிலும் திரு. பிரஸ்னேவ் உட்பட பெருந் தொகையானோர் தம்மைவழியனுப்ப வந்திருந்தது பாரதம் மீது அவர்கள் கொண்டுள்ள வாஞ்சையைக் காட்டுகிறது என்று அவர் மேலும் கூறினார். [உ]

# யாழ். - கேரதீவு பஸ் பிரயாணிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் — கேரதீவு பஸ்சேவை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

மழை காலங்களில் இந்த பஸ்களில் பெரும் ஒழுக்கு ஏற்படுவதுடன் நாற்புறங்களில் இருக்குதும் பக்கக் கண்ணாடிகள் சீராக இல்லாததால் மழை நீர் புகுந்தும் பிரயாணிகள் மிகத் தொல்லை அடைகிறார்கள்.

மழைநீர் தேங்கி பஸ்களின் ஆசனப்பகுதிகளின் கீழ் ஒரே சேறும் சகதியுமாகவும் இருக்கிறதாம். போதாக் குறைக்கு இந்தப் பஸ் சேவை சில தினம் தடைப்பட்டும் போகிறதாம்.

இதனால் மாணவ, மாணவிகளும் பொதுமக்களும் இந்த பஸ் சேவை குறித்துப் பெரிதும் அதிருப்திகொண்டுள்ளனர் எனக்கூறப்படுகிறது (உ)

# அறிவுப்போட்டியில் பரிசு பெற்றோர்

டண்டத்தப்பு, வெள்ளி

பண்டத்தரிப்புபட்டணசபை பிரதேசத்திலுள்ள சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினர் அண்மையில் நடாத்திய அகில இலங்கை சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை மேற்படி நிலயத்தின் மின்னொளி ஏற்று விழாவின்போது ஆசிரியர் திரு. எம். சிவானந்தன் வழங்கினார். பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

முதலாம்பரிசு: இ மலர்விழி (பண்டத்தரிப்பு), இரண்டாம் பரிசு: எஸ். சுஜீபன் (சுன்னாகம்), மூன்றாம்பரிசு: சி. சுதந்திராதேவி (தெல்லிப்பளை). இதுதவிர ஏழுபேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# கடத்தல்காரருக்கு அரசியல் வாதிகள் உதவுகின்றார்களா?

புதுடில்லி, அக். 28

கள்ளக் கடத்தலுக்கு அரசியல்வாதிகள் பின்னணியில் உதவுகின்றார்களா என்பது குறித்து இந்திய அரசு விசாரணை செய்யவிருக்கின்றது. இத் தகவலைமத்திய பிரதி நிதியமைச்சர் திரு. அகர்வால்பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார்.

கள்ளக்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு சுங்கஅதிகாரிகள் சிலரும், சில அரசியல்வாதிகளும் உதவி செய்வதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களைத் தொடர்ந்து இவ் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அவர்கூறினார்.

தற்போது கள்ளக்கடத்தல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் 140 பேர் காவலில் உள்ளனர். ஜெயப்பிரகாஷ் நாராயணிடம்சரணடைந்து இனிக்கடத்தலில் ஈடுபடுவதில்லையென சத்தியம் செய்து வெளியில் விடப்பட்ட முன்னாள் கடத்தல் பிரமுகர்கள்பலரும் இப்போது கடத்தலில் ஈடுபடுவதில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# சீனாவிலிருந்து 2 லட்சம் தொன் அரிசி இலங்கைக்கு வரும்!

பீக்கிங், அக். 28

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் நேற்று பீக்கிங்கில் கைச்சாத்தாகியது.

இலங்கையின் சார்பில் வர்த்தக அமைச்சர் திரு.லலித் அத்துலத்முதலியும் சீனாவின் சார்பில்சீனவர்த்தகஅமைச்சர் திரு. லீக்ஷியாங்கும் கைச்சாத்திட்டனர்.

16 கோடி அமெரிக்க டாலர் பெறுமதிமிக்கதாக 1978ம் ஆண்டுக்கான இவ்வர்த்தகஒப்பந்தம் அமைகிறது.

இந்த ஒப்பந்தத்தின் முதல் பகுதியாக 49,000 தொன் றப்பரை இலங்கை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யுமென்றுவர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பீக்கிங்கில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். இதற்குப்பதிலாக சீனா 2 லட்சம் தொன் அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யுமென்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து தெங்கு உற்பத்திப்பொருட்கள் இரத்தினக்கற்கள் என்பனசீனாவுக்கு ஏற்றுமதியாகுமென்றும் சீனாவிலிருந்து பிடவை வகைகள், மெழுகுப்பொருட்கள் என்பன இலங்கைக்குக் கிடைக்குமென்றும் வர்த்தகவலயம் அமைக்கப்பட்டதும் இலங்கையின் வர்த்தகம் பெருகுமென்றும் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மேலும்சொன்னார். (உ)

தென்னாபிரிக்க ஆயுத நிறுத்தம்

# ஐ. நா. தீர்மானத்திற்கு அமெரிக்கா ஆதரவு?

வாஷிங்டன், அக். 28

தென்னாபிரிக்காவுக்கான ஆயுதவிற்பனையைநிறுத்துவது என்ற ஐ. நா. சபையின் தீர்மானத்தை அமெரிக்கா ஆதரித்துள்ளது.

வாஷிங்டனில் நிருபர்கள் மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் இதனை அறிவித்தார்.

தென்னாபிரிக்கா தொடர்பான ஏனைய ஆலோசனைகள் பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருவதாகவும் திரு. கார்ட்டர் தெரிவித்தார்.

### இப்போது இல்லை

எனினும் தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத்தடை தற்போது விதிக்கப்படமாட்டாதென்றும் அவர் சொன்னார்.

இது இவ்வாறுஇருக்க, தென்னாபிரிக்காவுக்கு ஆயுத விற்பனையைநிறுத்தினால் அந்நிலையை தம் நாடு சமாளிக்குமென்றும் தென்னாபிரிக்காவிலேயே ஆயுத உற்பத்தியைதயாரிக்க முடியுமென்றும் தென்னாபிரிக்க அமைச்சர் திரு. போத்தா பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (உ)

# 73 பேர் மாண்டனர்

சென்னை, அக். 28

தமிழ் நாட்டில் இரு வாரகாலமாகத் தொடர்ந்து பெய்யும் 'பேய் மழை' நேற்று சற்று ஓய்வெடுத்தது. சென்னை உட்பட தமிழ் நாட்டின் பல பகுதிகள் நேற்று மாமூலான நிலைக்குத் திரும்பியிருந்தன.

பலத்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73 ஆக நேற்று அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டது

துப்பாக்கி அபகரிப்புகள்:

# சந்தேகநபரை எவரும் அடையாளம் காட்டவில்லை

மாவிட்டபுரம், வெள்ளி

துப்பாக்கி அபகரிப்பு சம்பவங்கள் தொடர்பாகக் கைதான சந்தேகநபரை எவரும் அடையாளம் காட்டவில்லை.

உரும்பராய், வர்த்தலைவிளான் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற 5துப்பாக்கி அபகரிப்புச் சம்பவங்கள் தொடர்பாக மானிப்பாயைச் சேர்ந்த இரத்தினம் செல்வேந்திரன் என்பவர் சந்தேகத்தின்பேரில் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

துப்பாக்கி பறிகொடுத்த ஐவரில் எவரும் இச் சந்தேக நபரை அடையாளம் காட்டவில்லை. இதையடுத்துஇந்நபரை தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

இந்நபரது சார்பில் சட்டத்தரணி திரு.மு.திருநாவுக்கரசு ஆஜரானார்.

# மொரார்ஜியின் விஜயம்பற்றி 'பிராவ்தா'

மாஸ்கோ, அக். 28

திரு.மொரார்ஜி, தேசாயின் மாஸ்கோ விஜயம் சோவியத் யூனியனுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வளர்கவும் வலுப்படுத்தவும் உதவும் என்று சோவியத் மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர் என இந்தியப் பிரதமரை வரவேற்று எழுதுகையில் பிராவ்தா பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

பிராவ்தா மேலும் தெரிவித்துள்ளதாவது;

"திரு.மொரார்ஜி தேசாய் இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்றவுடன், அணிசேரா கோட்பாடுகளுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டையும், தேசிய விமோசன இயக்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும், குடியேற்றவாதத்திற்கும் எதிரான இந்தியாவின் ஆதரவையும் மீண்டும் உறுதி செய்தார். பதட்டத்தைத் தணிப்பது, ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவருவது அமைதியையும், சமாதானத்தையும் வலுப்படுத்துவதற்கான முன் முயற்சிகளை மொரார்ஜி தேசாய் வரவேற்றார். சோவியத் யூனியனுடனான இந்தியாவின் நட்புறவை அவர் மேலும் வளர்க்க விரும்புகிறார்". (இ)

# மாநில சுயாட்சி பற்றி வங்க-காஷ்மீர் உடன்பாடு

ஸ்ரீநகர், அக். 28

மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் வழங்குவதுபற்றி வங்க முதல்வர்ஜோதிபாஸுவுக்கும்-காஷ்மீர் முதல்வர் ஷேக் அப்துல்லாவுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை வெற்றி அளித்ததின் பேரில் இன்று உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இவ்விரு தலைவர்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் சமஷ்டி ஆட்சி முறையில் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் வலுவிழந்துவருவதாகத் தெரிவித்துள்ளனர். (கி)

# சென்னையில் தடையுத்தரவு நீடிப்பு

சென்னை, அக். 28

சென்னையில் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள்நடத்துவதற்கான தடையுத்தரவு மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந் நீடிப்பு உத்தரவை சென்னை பொலிஸ் கமிஷனர் பிறப்பித்தார்.

சென்னையில் தொழிலாளர் வேலைநிறுத்தங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ)

# 'பல்லவன்'வேலைத்தளத்தை மொகமட் பார்வையிட்டார்

சென்னை, அக். 28

இங்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமட், குரோம்பேட்டையிலுள்ள பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷன்வேலைத் தளத்தைப்பார்வையிட்டார்.

அமைச்சருடன், போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. மகிந்தா இளையபெருமா, இ. தொ.கா தலைவர் திரு எஸ். தொண்டமான் ஆகியோரும் இங்குவந்திருந்தனர். இவர்களை வேலைத் தளத்தில் நிர்வாக முகாமையாளர் திரு. சி. ஏ. ஸ்ரீனிவாசன் வரவேற்றார். பின்னர் இவர்கள், பஸ் நிர்மாண அமைப்பு, பழுதுபார்த்தல் வேலைத்தளத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

வேலைத்தளநடைமுறைகள், புதிய பஸ்கள் அமைப்பு முறைகள் பற்றி விரிவாக ஆராய்ந்த அமைச்சர் மொகமட், பின்னர் கார்ப்பரேஷன் அதிகாரிகளுடன் பல்வேறு விஷயங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்.

# அமைச்சு ஊழியர் இடமாற்றம் பெறுவர்

கொழும்பு. வெள்ளி

திட்ட, பொருளாதார விவகார அமைச்சின் ஊழியர்கள், மற்றைய அமைச்சுகளுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

மேற்படி அமைச்சு அடுத்த வாரம் ஒழிக்கப்படவிருப்பது தெரிந்ததே.

# மும்மொழித் திட்டத்தை ஆதரிக்கிறேன்; அதனால்மட்டும் இனப்பிரச்னை தீராது

## — வி. பி. விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''நான் மும்மொழித்திட்டத்தை என்றும் முன்வைத்தும், ஆதரித்தும் வந்துள்ளேன். இது மாத்திரம் இனப்பிரச்னைகளைத் தீர்க்கும் பரிகாரமல்ல என்பதையும் அன்றும் இன்றும் நான் நம்புகின்றேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்''

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

சங்கானை மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் தாம் பேசிய 'மும்மொழித் திட்டம்'' பற்றிய பேச்சு பற்றி சில வட்டாரங்களில் தெளிவின்மை ஏற்பட்டிருப்பதால் தாம்பேசியதை தெளிவுபடுத்தும் வகையில் இவ்வறிக்கையினைத் தாம் விடுப்பதாக திரு. வி. பி. கூறியிருக்கிறார்.

இவ்வறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

### பிரச்னைதீர இருவழிகள்

''பல இனங்கள் சேர்ந்து வாழும் நாடுகளில் நிலவிவரும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் இருவழிகள் அனுஷ்டிக்கப் படுகின்றன.

1. இனங்களை இரண்டறக் கலக்கச்செய்து கலாச்சார ரீதியில் இனங்களுக்கு இடையில் சங்கமத்தை ஏற்படுத்துவது.

2. இனத்தின் தனித்துவத்தை ஏற்று அந்தந்த இனங்களின் பண்பு, கலை, கலாச்சாரங்களை மதித்து அதன் அடிப்படையில் எழத்தகுந்த சமத்துவத்தை அங்கிகரித்து இன, மத சமத்துவத்துடன் அந்த இனம் நிலைபெற்ற வாழும் ஓர் பிரதேசத்தை வரையறுத்து ஏற்று அப்பிரதேசத்தில், அந்த இனத்தின் தாய்மொழியை ஆட்சிமொழியாக அங்கீகரித்தல்.

நாட்டிலுள்ள இனங்களின் மொழிகளை சமத்துவம் பெற்ற தேசிய மொழிகளாக ஏற்று, அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்தல்.

இதுபோல் வேற்றுமையில் ஒற்றுமை, அல்லது தனித்துவத்தைக் காத்து ஐக்கியத்தை உருவாக்கும் வழியாகும்.

### பிரதமரின் மும்மொழித்திட்டம்

இன்று எம்நாட்டின் புதிய அரசின் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன முன்வைத்துள்ள மும்மொழித்திட்டம் பாடசாலை சம்பந்தப்பட்டது.

தாய்மொழி மூலம் கல்வியும், அயல்மொழி அறிவும், உலகமொழித் தொடர்பும் அமைவது வரவேற்கத்தக்கது.

மும்மொழித் திட்டத்தின் அடிப்படையில் கல்வித்துறையில் மாற்றங்கள் முன்வைக்கப் படுகின்றன.

### தமிழருக்கு தேசியமொழி அந்தஸ்து

ஆனால் அரசு உருவாக்கவிருக்கும் புதிய அரசியல் சாசனத்தில் தமிழைத் தேசிய மொழியாக அரசுநாடு முழுவதும் சட்ட அங்கீகாரம் தருவதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகத் தமிழையும் சட்டப்படி ஏற்கும் நிலைமையும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களை அங்கிகரித்து அவற்றில்குறைந்த அளவில் மாநில சுயாட்சி முறையையாவது அங்கீகரித்த பின் மும்மொழித்திட்டம் முன்வைக்கப்படுமாகில் சந்தேகத்துக்கு இடமின்றி அனைவரும் இதை வரவேற்பர்.

### இனப்பிரச்னைக்கு தீர்வுகாண இயலாது

முன்கூறிய நிபந்தனைகள் அற்ற முறையில் மும்மொழித் திட்டத்தை முன்வைத்து தேசிய ஐக்கியத்தை உருவாக்கலாம் என்று இந்நாட்டின் அரசியல் தலைமை உணர்வது அவர்கள் தமது பிரச்னைகளுக்கு இலகுவான தீர்வைக் காண உதவுமேயன்றி இனப் பிரச்னைக்குத் தீர்வாக அமையாது.

### தர்க்க ரீதியான முடிவு

மேலும் இன்றுள்ள நிலையில் மும்மொழித் திட்டத்தைப் பாடசாலைகள் ஊடாக அறிமுகம் செய்வது காலப்போக்கில் தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர்கள் தமிழையும் கற்றுக்கொண்டால் மொழிப் பிரச்னையின்றி தொடர்புகள் இலகுவாக்கப்படும் என்ற கருத்தை ஆதாரமாகக்கொண்டது.

தர்க்கரீதியாக இதன் முடிவு பெரும்பான்மை மக்கள் பேசும் சிங்களத்தையே தமிழர்கள் கற்றுக்கொண்டுவிட்டால் இந்நாட்டில் மொழி, இனப் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்ற கருத்தை மையமாகக் கொண்டது.

### இனத்தின் சிதைவில் ஐக்கியம் எழாது

மும்மொழித்திட்டம் இனங்களையும் முட்டைக்கோப்பி அடித்துக்கலக்க உதவும் மூன்று ஈர்க்கில்களைப்போன்றது.

ஒரு இனத்தின் சிதைவில் தேசியஐக்கியம் எழாது. இனத்தின் சமாதியில் ஒருமைப்பாடு காண்பது நீதியல்ல.

இனச்சமத்துவத்தின் அடிப்படையில் மும்மொழித்திட்டம் முன்வைக்கப்பட்டால் அது வரவேற்கத்தக்கது.

### என் மும்மொழித் தேர்ச்சி

மும்மொழிகளில் தேர்ச்சி பெற்ற பல்லாயிரவருள் நானும் ஒருவன் இதனால் எனக்கும் சிங்களச் சகோதரர்களுக்கும் இடையில் உறவும் தொடர்பும் இலகுவாக்கப்பட்டிருப்பது உண்மை.

ஆனால் எனக்குத் தெரிந்த மொழி வளத்தைப் பயன்படுத்திச் சொல்லியும் என்னால் நான் என்னால் நான் சார்ந்த தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படை

(5-ம் பக்கம் பார்க்க)



கனேடிய பேராசிரியர் மண்வள ஆராய்ச்சி நிபுணர் திரு. சி. ரி. பென்றலி, தாலகாவலர் கனகராஜாவின் மைத்துனர் பரிபாலிக்கும் தோட்டத்தைப் பார்த்து மகிழ்கின்றார்.

# கிராமசபை ஆயுர்வேத டாக்டர்களின் சம்பளம்

## ஆயுர்வேதக் கமிஷனரே வழங்க வேண்டுமென முடிவு

யாழ்ப்பாணம், சனி

கிராமசபைகளில் கடமையாற்றும் ஆயுர்வேத டாக்டர்களுக்கு ஆயுர்வேதக் கமிஷனரே இனிமேல் சம்பளம் வழங்க வேண்டும் என்று கோருவதென யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் பிரதி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பி. சி. இம்புலான கலந்துகொண்ட மகாநாட்டில்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரையும் கிராமசபைகளே இவர்களது சம்பளத்தை வழங்கி வந்தன. ஆனால் கிராமசபைகளின் நிதிநிலைமை குறைவாக இருப்பதால் ஆயுர்வேதக் கமிஷனரே இச்சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கோரப்பட்டது.

ஐ. நா. குழந்தைகள் பிரதிஸ்தாபனம் காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, சுன்னாகம் ஆகிய மூன்று இடங்களுக்கு குடிநீர் வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் கிராம சபைகளுக்குத்தான் உதவியளிப்பதாக இருப்பதால், இந்த உதவியை அமைச்சர் மூலமாக நகர சபைக்கும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

ஊர்காவற்றுறை குடிதண்ணீர்த்திட்டம்பற்றி ஆராயப்பட்டது. இரண்டு புதிய பம்ப் மாற்றவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### வாகரை தண்ணீர்த் திட்டம்

வாகரைவத்தை தண்ணீர்திட்டத்திற்குப் புத்தூர் கிராம சபையில் போதிய நிதிஇல்லாததினால், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம், இதற்குப் பணம் வழங்க அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலா சம்மதம் தெரிவித்தார்.

பருத்தித்துறை குடிநீர்த்திட்டத்தின் அவசியம்பற்றி பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் தெரிவித்தார்.

மாயக்கை குடிநீர்த்திட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின்மூலம் 25,000 ரூபா ஒதுக்கவேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது அராலி வடக்கு குடிநீர்த் திட்டத்திற்கும், பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் 25,000 ரூபா ஒதுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### யாழ். பஸ் நிலையம்

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் மாற்றம்பற்றி தெரிவிக்கப்பட்டபோது யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் அதுபற்றிய விபரத்தைக் கேட்டார் பஸ் நிலையத்தின் ஒருபகுதிமட்டுமே, பண்ணைக்கு மாற்றப்படவிருப்பதாக,யாழ். விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

### வீடமைப்புத் திட்டம்

வீடமைப்புத் திட்டங்கள் பற்றி அடுத்து ஆராயப்பட்டது. பாமர மக்களுக்கு காரைநகரில் 50 வீடுகளும், மயிலிட்டியில் 50 வீடுகளும், பலாலியில் 30 வீடுகளும், வட்டுக்கோட்டையில் 20 வீடுகளும், மானிப்பாயில் 30 வீடுகளும் கட்டுவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

வீடமைப்புத் திணைக்களம் இவர்களுக்கு, கட்டடசாமான்களும், காணியும் வழங்குமென்றும், அவர்கள் தங்கள் செலவிலேயே வீட்டைக்கட்ட வேண்டுமென்றும், மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நடுத்தர வகுப்பினருக்கு வீடுகட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டபோது கிளிநொச்சியில் கடந்த அரசின் காலத்தில் நடுத்தர விடமைப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அவ்வீடுகள், காணியுள்ளவர்களுக்கும், வீடுள்ளவர்களுக்கும், வழங்கப்பட்டதாக கிளிநொச்சி எம். பி திரு வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் மற்றொரு நடுத்தர வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கவேண்டும் எனமுடிவு செய்யப்பட்டது. (ச)



# அனுராதபுர ஊழியருக்கு களுத்துறைக்கு இடமாற்றம்

சுழிபுரம், வெள்ளி

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய மருந்தாளர்க்ளுக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. சுழிபுரத்தைச் சேர்ந்த இருவருக்கு களுத்துறை வைத்தியசாலையில் கடமையாற்றுமாறு இடமாற்ற அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினுல் பெரிதும் பாதிக்கப்பட்ட இவர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லாது இன்றுவரை சுழிபுரத்திலேயே இருந்துவருகின்றனர்.

களுத்துறைக்கு வேலைக்குச் செல்வதிலும்பார்க்க அநுராதபுரத்திற்கே திரும்பவும் போவது பரவாயில்லை என்று இந்த மருந்தாளர்கள் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தனர். (அ)

## இருபிரிவுகளில் முதலிடம்

நெல்லியடி, வெள்ளி

உடுப்பிட்டி வட்டாரப்பாடசாலைகளுக்கு இடையேயான சங்கீத, நாடகப் போட்டிகளில் திருஇருதயக்கல்லூரி சங்கீதப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் முதலாம் இடத்தையும் நாடகப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது. இம்மாணவர்களுக்குக் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் பாராட்டுத் தெரிவித்தார். (அ)

## கூட்டுறவுச்சங்க விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கவிற்பனைநிலையமொன்று நவீன சந்தை மேல்மாடியில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசப்பினுல் திறந்துவைக்கப்பட்டது. இவ்வைபத்தில் பேசிய அவர் ''பொதுமக்கள் நீண்ட கியூ வரிசைகளில் நின்று பொருட்களைச் சிரமப்பட்டுப் பெறும் வழக்கம் மாற இவ்வித நிறுவனங்கள் உதவவேண்டும் எனவும் மக்களுடைய வாழ்க்கைச்செலவைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தி கறுப்புச் சந்தையை இல்லாதொழிக்க இத்தகைய அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் பேருதவியாக அமையுமெனவும் கூறினுர்.

இவ்விற்பனை நிலையத்தில் யாழ். பிரதேச உற்பத்திப் பொருட்களான பண்டத்தரிப்பு சங்கானை, ஜவுளி தினுசுகள், உடுப்பிட்டியில் உற்பத்தியான நவீன சப்பாத்து வகைகள், தட்டுப்பாடாக இருக்கும் கொப்பி, டின்பால் வகைகள், சவர்க்கார வகைகளும் இங்கு கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. (கி-அ)

## ஊறணி தேவாலயத்திருட்டு: எதிரிக்குஒத்திவைப்புச்சிறை

மாவிட்டபுரம், வெள்ளி

ஊறணி கிறிஸ்தவ தேவாலயத்திருட்டுக்குறித்துக் கைதாகிகுற்றத்தை ஒப்புக் கொண்ட நபருக்கு 5 வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஊறணி கிறிஸ்தவ தேவாலயத்தினுள் இரவு நேரத்தில் புகுந்து 3000 ரூபா பெறுமதியான சைக்கிள், றேடியோ மக், கோண் அம்பிளிவயர் ஆகிய பொருட்களைத்திருடிய்து குறித்து மட்டக்களப்பில் வைத்துக் கைதான வி. தவராசா என்னும் நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டசமயம் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டு தண்டனை வழங்குவது ஒத்திவைக்கப்பட்டது.

இந்நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவருக்கு 5 வருட காலத்தில் ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைதண்டனை விதிக்கப்பட்டது. (உ)

# பாடசாலைகளுக்கு மூடு விழா!

## ஆசிரியர்கள் இடமாற்றம் காரணமாம்

வவனியா, வெள்ளி

'அரசியல் காரணமாக ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதால் வவனியாத் தொகுதியில் பல பாடசாலைகள் கடந்த இரு மாதங்களாக மூடப்பட்டுள்ளனவாம்.' வவனியாத்தொகுதி எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் கல்வி அமைச்சருக்குத் தெரிவித்துள்ள புகாரில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எம். பி தமது புகாரில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''வவனியாத் தொகுதியில் சில பாடசாலைகளிலிருந்து அரசியல் காரணங்களுக்காக ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இதனுல் சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. நடந்து முடிந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து கடந்த இரு மாதங்களாக இப்பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் இறுதித் தவணைப் பரீட்சைக்கு நிற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சில ஆசிரியர்கள் குறிப்பாகப் பெண்கள் இடமாற்றம் செய்யப்பட விருப்பதாகத் தெரிகிறது.

### விருப்புவெறுப்புக்குரிய பிராணிகளல்ல

''ஆசிரியர்கள் விருப்புவெறுப்புக்குரிய பிராணிகளல்ல பாடசாலைகளில் கல்வி போதிப்பவர்கள் ஆசிரியர்களே. அரசியல் காரணங்களுக்காக எந்தவொரு ஆசிரியரும் இடமாற்றம் செய்யப்படக்கூடாது ஏற்கனவே இடமாற்றம் பெற்றவர்கள் மீண்டும் பழைய இடங்களுக்குப் போக அனுமதிக்கவேண்டும். இனிமேல் செய்யப்படவிருக்கும இடமாற்றங்களை ரத்துச் செய்யவேண்டும். இடமாற்றங்கள் செய்ய விரும்பப்பட்சத்தில் இதுபற்றி வவனியாப் பகுதி வித்தியாதிபதிக்குக் கட்டளையிடவும்'' இப்புகாரைஅவசரக் கடிதமூலம் திரு. மு. சிவசிதம்பரம் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார். (அ)

## மும்மொழி ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக்கோரிக்கைகளில் உள்ள நீதியைத்தானும் என்னுல் உணரவைத்து அங்கீகாரம் பெற்றுத்தரமுடியவில்லை.

இந்நிலையில் நாட்டில் உள்ள அனைவரும் மூன்றுமொழிகளில் பயிற்சி பெற்றுலும் மேற்படி நிலையே மேலும் நீடிக்கும்.

### எதிர்ப்பவன் அல்ல ஆனுல்...

எனவே நான் மும்மொழித் திட்டத்தை என்றும் முன்வைத்தும், ஆதரித்தும் வந்துள்ளேன் என்பதைக்கூறிக் கொள்வதுடன் இதுமாத்திரம் இனப்பிரச்னைத் தீர்வுக்குப் பரிகாரமல்ல என்பதையும் அன்றும் இன்றும்நான் நம்புகிறேன்.'' (உ)

## திருட்டு: இருவருக்கு றிமாண்ட்

மாவிட்டபுரம், வெள்ளி

வெங்காயம் திருடப்பட்டது குறித்துக் கைதுசெய்யப்பட்ட இருசந்தேகநபர்களை விசாரணை செய்தசமயம் மாடு திருடப்பட்ட சம்பவமொன்றும் அம்பலத்துக்கு வந்ததாம்.

இவ்விரு சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதிபதி றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த ரி. செல்வராசா என்பவரது 800 ரூபா பெறுமதியான வெங்காயம் திருடப்பட்டது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து விசாரணையிலீடுபட்ட பொலிசார்சந்தேகத்தின்பேரில் ஆனந்தராசா, சிவகுமாரன் ஆகிய இரு நபர்களைக் கைது செய்து விசாரணை செய்த போது இந்நபர்கள் வெங்காயக்களவுடன் மாடுதிருடுவதிலும் ஈடுபட்டது தெரியவந்ததாம்.

அச்சுவேலியைச் சேர்ந்த பி. இராசதுரை என்பவரது 500 ரூபா பெறுமதியான மாட்டை இவர்கள் திருடி வெட்டியதாக சந்தேகிக்கப்பட்டதையடுத்து விசாரணை செய்தசமயம் அவர்களால் விற்கப்பட்டதாகக் கூறப்படும் இறைச்சிபோக மாட்டின் தலைமட்டும் அகப்பட்டது.

இவர்கள் களவாடியதாகக் கூறப்படும் வெங்காயத்தையும் மாட்டின் தலையையும் இவர்களையே சுமக்கச்சொல்லி அச்சுவேலியிலிருந்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையம் வரை கொண்டுவந்த பொலிசார் இவ்விருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தசமயம் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

## நிராகரிப்பு

புதுடில்லி அக். 28

திருமதி காந்தி புதுடில்லி மாஜிஸ்திரேட்டால் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக அரசு தாக்கல் செய்துள்ள மறுவிசாரணையை நிறுத்தி வைக்குமாறு தாக்கல் செய்யப் பட்ட எதிர்மனு ஒன்றை புதுடில்லி உயர்நீதி மன்றம் நிராகரித்துள்ளது

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவராம் - கீதாஞ்சலி
காத்திருப்பேன் உனக்காக

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்

மனேஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
YOU ONLY LIVE ONCE
(Scope Color Action Packed Thriller)

சாந்தி யாழ். நகர்
30-10-77 ஞாயிறுவரை
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
'FIVE CRAZY BOYS'
(Color)
போன்: 7642

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்)
காலை 9-30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும். காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
போன்: 7693
எம். ஜி. ஆர். - லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

RIO (Jaffna)
Daily 4 Shows
Grand new Release
Live and Times of
HITLER
Please note change in show times 10-30, 4-30, 7-00, 9-30.

மூன்றுவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்

(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)

**மணிவாக்கு**

விலங்கு வாழ்வுக்கும் மனிதவாழ்விற்கும் உள்ள வேறுபாடு யாதெனப் பலவாறு ஆராய்ந்து பார்த்தால், எங்களுக்குள் எழும் பல சிக்கல்கள் தாமே யகன்றுவிடும்.

— காந்திமகான்.


ஈழநாடு

The Eelanaadu


## பிரதி அமைச்சரின் யாழ். மாநாடு

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதி உள்ளூராட்சி வீடமைப்புத்துறை அமைச்சர் திரு. பி. சி. இம்புலாளு நடத்திய மாநாட்டில் கலவரத்தின்போது எரிந்து தரைமட்டமான யாழ். நகரின் பழைய மார்க்கட்டை அரசாங்கம் தனது செலவிலேயே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது

இம் மாநாட்டில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேசிய அரசுப்பேரவைஉறுப்பினர்கள் வற்புறுத்தியதைத் தொடர்ந்தே, தரைமட்டமான பழைய மார்க்கட்டை அரசாங்கம் தனது செலவிலேயே கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது.

யாழ். நகரின் குடிநீர்ப் பிரச்னை மற்றும் பல முக்கிய பிரச்னைகள் பற்றியும் இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பிரதி அமைச்சரே நேரில் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விரைவில் செயல்படுமென்று எதிர்பார்ப்போம்.

மக்களின் பிரதிநிதிகளான தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் இதுபோன்ற மாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை இந்தமாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் தமது தொகுதித் தேவைகள் பற்றி அமைச்சர்களையோ பிரதி அமைச்சர்களையோ சந்திக்கக் கூடாதுதென்றும், அவர்கள் கலந்துகொள்ளும் மாநாடுகளிலோ, வரவேற்பு விருந்துவைபவங்களிலோ கலந்துகொள்ளக் கூடாதென்றும் சில வருடங்களுக்குமுன் அதாவது முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

முன்னைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்தத் தீர்மானம் மேற்கொள்வதற்கு நியாயமிருக்கலாம்.

அந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளுக்கு உரியமதிப்பளிக்கவில்லையென்பது உண்மை.

ஆளும் கட்சி அமைப்பாளர்களுக்கே அந்த அரசாங்கம் மதிப்புக்கொடுத்து வந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்களின் எந்தக் கோரிக்கையும் யோசனையும் அந்த அரசாங்கத்தின் செவியில் ஏறவில்லை.

இப்போது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. மக்களின் பிரதிநிதிகளுக்கே அவர்கள் எந்தக் கட்சியானாலும் மதிப்புக் கொடுப்போம் என்று பிரதமர் கூறிவருகிருர்.

எனவே முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் மேற்கொண்ட பகிஷ்கரிப்புத் தீர்மானத்தை புதிய ஆட்சி வந்த பின்னரும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியது அவசியந்தானு?

புதிய அரசாங்கம் எப்படி நடந்துகொள்கிறது என்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டியது அவசியம்.

ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டிய விஷயங்களில் ஒத்துழைப்புக் கொடுத்து தங்கள் பிரதேசங்களை அபிவிருத்திசெய்யக் கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நட்புறவையும் நல்லெண்ணத்தையும் கொடுத்தும் பெறுவதற்கும் முயன்றும் அது பயனளிக்காத கட்டத்தில் மீண்டும் பகிஷ்கரிப்புத் தீர்மானம் 'நிறைவேற்றுவதில் ஒன்றும் கஷ்டமில்லையே!

# "மொழிப்பிரச்னையை தீர்த்தால் நாட்டில் வேறு பிரச்னை எழாது"

யாழ்ப்பாணம், செவ்.

"பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, தாமதிக்காமல், அரசியல் சாசனத்தில் தமிழ் மொழிக்கு உரியஇடத்தை அளித்து மொழிப் பிரச்னையைத் தீர்த்து வைத்து விட்டால், நாட்டில் எத்தகைய பிரச்னையும் ஏற்படாது."

ஏழாலை முன்னள் கிராம சபைத்தலைவரும், ஏழாலை வணிகர் சங்கக்கிளைத் தலைவருமான திரு சிவகுரு பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

கலவரத்திற்கு முன்னர் இருந்த நிலைமையை எப்படி மீண்டும் ஏற்படுத்தலாம்? என்று பாதுகாப்பு அமைச்சு மேலதிகச் செயலாளர் திரு. சேபாலஅட்டிகல கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

திரு. சிவகுரு மேலும் கூறியதாவது: நான் பிரிவினையை ஆதரிக்கவில்லை. ஐக்கிய இலங்கையையே ஆதரிக்கிறேன். 1947-ம் ஆண்டு முதல் காலத்திற்கு காலம் அரசியல் வாதிகள், இந்தமொழிப்பிரச்னையை வைத்துக்கொண்டு அரசியல் லாபம் தேடிவருகின்றனர். இந்த மொழிப் பிரச்னைதான் கலவரத்திற்கும் காரணமாக இருக்கிறது. பிரதமர் உடனடியாக நிரந்தரமாக இந்த மொழிப்பிரச்னையைத் தீர்த்து விட்டால் நிலைமை சீராகிவிடும்."

வணிகர் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. ரீ. சங்கரப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

"கலவரத்தின்போது வர்த்தகர்கள் அதிசப்பாதிக்கப்பட்டனர். வியாபாரிகள்கொள்ளையடிக்கப்பட்டனர். இங்கே சிங்கள வர்த்தகர்களுக்கும், தெற்கில் தமிழ்வர்த்தகர்களுக்கும் பலத்த கஷ்டங்கள் ஏற்பட்டது. இதனுல் வியாபாரம் அதிகம் பாதிக்கப்பட்டது. வர்த்தகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இங்கு மீண்டும் வரும் சிங்கள வர்த்தகர்களுக்கு உதவியளிக்கத் தயாராக இருக்கிறோம். அதே சமயம் பொலிஸாரும் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

"எமது தமிழ் சகோதரர்களை தெற்கில் சிங்கள மக்கள் பாதுகாப்பதுபோல், நாமும் இங்கு சிங்கள வர்த்தகர்களைப் பாதுகாத்து உதவி அளிப்போம். அதற்கு வணிகர் சங்க யாழ்ப்பாண கிளை தேவையான ஒத்துழைப்பை வழங்கும். (ச)

## பாஸ்போர்ட் யாருடையது!

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியிலிருந்து கடந்த 22-ம் திகதி சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வந்த இ. போ. ச பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட பாஸ்போர்ட் ஒன்றை கொக்குவில் தாவடிரோட்டைச் சேர்ந்த ஆர். செந்தில்வேல் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

## கொள்ளைகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து பெண் உட்பட மேலும் இருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டனர்.

இவர்களுடைய வாக்கு மூலத்திலிருந்து இம்மாதம் 21-ந் திகதி சுன்னுகம் பக்கத்திலிருந்துமாகியப்பிட்டி நோக்கி வந்த கார் ஒன்றிலிருந்து இரு இளைஞர்கள் இறங்கி மாகியப்பிட்டிச் சந்தைக்கருகாமையில் காத்து நின்ற இரு சைக்கிளில் ஏறிச்செல்லும் சமயத்தில் இந்த கைத்துப்பாக்கி நிலத்தில் விழுந்ததாகவும் இதனைச் கண்டெடுத்த இளைஞர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் கொடுத்துவைத்ததாகவும் முதலில் கைதான சந்தேக நபர் அதை வாங்கி வைத்திருந்ததாகவும் இதனை முதல் கண்டெடுத்து வைத்திருந்தவரை கைத்துப்பாக்கியை தவறவிட்ட கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் இருவருடன் வந்து துப்பாக்கியைத் திருப்பி தம்மிடம் கொடுக்கும்படியும் தவறினுல் வீட்டுக்கு நெருப்பு வைத்து விடுவதாகவும் இருமுறை பயமுறுத்தி சென்றனர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இம்மாதம் 21-ந் திகதியே இச்சம்பவம் நிகழ்ந்தமையால் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிஆசியர்களின் சம்பளப் பணம்ரூபா 34ஆயிரம்கொள்ளையில் இந்த கைத்துப்பாக்கி பாவிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் கொண்ட பொலிசார் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபர் திரு. சின்னத்தம்பி தியாகராசாவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்கையில் கைப்பற்றியுள்ள கைத்துப்பாக்கியை அவர் அடையாளம் காண்பித்துள்ளாராம்.

குற்றத்தடுப்பு இலாகாவினர் மேலும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

**அமரர்**

**தெ. து. ஜயரத்தினம்**



தோற்றம்: 15-10-1913
மறைவு: 29-10-1976

பேசுஜய ரத்னப்
பெரியோய் புவியேத்த
மாசனக்கல் லூரிதந்த
மாணகிப — நேசமிகப்
பொன்னைப் புவியைப்
புகழை மறப்பினும்நாம்
நின்னை நினைப்போம்

நிதம்

7532

## இன்றைய ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். பாரதி பாஷிய வித்தியாசாலையில் மாவட்டத் தலைவர் திரு. வ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னைகள், அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பளத்தை வங்கி, தபால் கந்தோர் ஆகிய இடங்களிலிருந்து கொண்டுசெல்லும்போது ஏற்படும் கஷ்டங்கள் போன்ற விஷயங்கள் பற்றி ஆராயப்படும். (கெ-இ)

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திகளில் பொலிஸார்நேற்று வாகனங்களைச் சோதனையிட்டனர்.

பொலிஸார் இச்சம்பவம் பற்றி விசாரணை செய்து வருகின்றனர்கள். (க)

## யாழ். வளாகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**மாணவரின் உரிமை**

வேறு எந்த வளாகத்திலும் இல்லாத தமிழ் மாணவருக்குரிய உரிமைகள் யாழ்.வளாகத்தில் மட்டுமே கிடைக்கின்றன. மன்றங்களின் தலைமைப் பதவி விளையாட்டுத்துறைகளில் முதலிடம் போன்றவை வேறு எந்த வளாகத்திலும் தமிழருக்குக் கிடையாது. எனவே எமது யாழ் வளாகத்திற்கு வர உரிமைகோர வேறு வளாகத் தமிழ் மாணவருக்கு சுதந்திரமுண்டு. வளாகத்தில் அனுமதி கிடைக்க தமிழ் மாணவருக்கு அதிர்ஷ்டம் வேண்டும்'. (கெ-அ)

(5ம் கலத் தொடர்ச்சி)

உ. சீதன ஒழிப்பே உங்கள் இலட்சிய மாக்குங்கள்!"

0 0 0

இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இதுசமர்ப்பணம்!

— ஊர்சுற்றி

## மரண அறிவித்தல்

## நா. ஜெயராமக் குருக்கள்

ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோவில் தர்மகர்த்தா சிவஸ்ரீ நா. ஜெயராமக்குருக்கள் சிவபதம் அடைந்துவிட்டார்.

ஈமைக்கிரியைகள் ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும்.

7535

## நாடும் நடப்பும்

வேட்டியை மடித்துக்கட்டி, தலையில் முண்டாசுடனும் ஒரு தோளில் சால்வைத்துண்டுடனும் 'வெறும்மேலுடன் காட்சியளிக்கும் பிரதமர் ஜே ஆர். இடதுகையால் ஏர் பிடித்து வலது கையிலுள்ள தடியால் எருதுகளைக் கலைத்து வயலில் உழுது செல்லும் காட்சியைப் பத்திரிகையில் வெளிவந்த படத்தில் பார்த்தவர்கள்இவர் உண்மையான விவசாயிதான் என்று எண்ணுவார்கள்.

அவர் அருகே நிற்கும் கூட்டத்தைப் பார்க்கும்போதுதான் இவர் பஞ்சத்துக்குஆண்டியோ பரம்பரை ஆண்டியோ என்று கேட்கத்தோன்றும்.

பட்டினியை விரட்டுவதற்காக எந்தவேஷம் போட்டாலும் அது எல்லோருக்கும் மகிழ்ச்சிதரக் கூடியதுதான்!

ராஜாஜி, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது வழமையான தூயவெண்ணிற வேட்டி நாஷனலுடனும், கறுப்புக் கண்ணுடியுடனும் ஏர் பிடித்து உழுது உணவுற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்தகாட்சிபத்திரிகைகளிலும் இந்தியத்தகவல் பகுதியின் திரைப்படங்களிலும் வெளிவந்தன. ஏ. வீ எம். தயாரித்த 'வாழ்க்கை' திரைப்படத்தி முதல் காட்சியே இதுதான்!

இதனை அச்சமயத்தில் அண்ணு உட்படப் பலரும் கிண்டல் செய்தனர்.

இப்போது இந்தியா எந்த நாட்டிடமிருந்தும் அரிசியையோ தானியங்களையோ இறக்குமதி செய்யவில்லை. உணவில் தன்னிறைவுகண்டுள்ளது!

நமது நாட்டிலும் மண்வெட்டி பிடித்தும், டிராக்டரில் ஏறியும் உணவுற்பத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்த பிரதமர்கள், அமைச்சர்களைப் புகைப்படங்களிலும் தகவல் பகுதித்திரைப்படங்களிலும் பார்த்து மகிழ்ந்தோர் ஏராளம்!

ஆனல் இன்னமும் நாம் வெளிநாடுகளைத்தான் அரிசிக்கும் மாவுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேம். இப்போது கூட நமது நாட்டுவர்த்தக அமைச்சர் சீனுவுக்குச் சென்று இரண்டு லட்சம் தொன் அரிசியை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கிருர்.

'தார்மீக ஆட்சி' பற்றிக் கனவுகாணும் பிரதமர் ஜே. ஆர் இன்னும் ஐந்து ஆண்டுகளில் அரிசியில் தன்னிறைவு காணமுடியுமென்று கூறியிருக்கிருர்.

அவரது வகராசியைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

0 0 0

காரைநகர் பொன்னுவளையிலிருந்து ஆ தங்கரத்தினம் என்னும் அன்பர் "சீதன ஒழிப்பு சாத்தியமாகுமா?" என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியனுப்பியிருக்கிருர்.

"சீதனம் எனும் கொடுமை எமது சமுதாயத்தை தீவிரமாகத் தீண்டிவருகிறது.

இக்கொடுமையை இளைஞர்களாலேயே தீர்க்க முடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை.

ஒன்றுபட்டால் உண்டு வெற்றி.

உழைப்பால் உருவாகும் இலட்சியம்.

சீதன ஒழிப்பு சாத்தியமாகும்.

எப்படி?

அ. சீதனம் என்ற சொல்லையே மறந்திடுங்கள்!

ஆ. சீதனம் வேண்டாம் என்று பிரசாரம் செய்யுங்கள்!

இ. சீதன ஒழிப்பு இயக்கத்தில் இன்றே சேருங்கள்!

ஈ. சீதனஒழிப்பு இயக்கத்தை நேர்வழியில் நடாத்துங்கள்!

(4ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka